IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 56/2022

Deposition of Witness : PW 1

Name : தரண்சாய் (வயது – 34)

Father's Name /W/o : த/பெ ஜனார்தனம்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : திருநின்றவூர்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 03.06.2025.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு சொத்து ஆதியில் யாருடையது என்ற விபரம் தெரியுமா என்றால் கணேசன் பண்டிதர் வாரிசான சரவணனிடமிருந்து ரவி வாங்கினார் ரவியிடமிருந்து எனக்கு சொந்தமானது. மேற்படி கணேசன் வாரிசான சரவணன் பெயரில் ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா. ஆ – 1 ஈஸ்வரி என்பவர் சரவணனுக்கு எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் என்றால் சரிதான். மேற்படி சாட்சியம் அளித்து போல் தாவா சொத்து ஆதியில் கணேசன் வாரிசான சரவணன் என்பவருடையது இல்லை என்றாலும் பிரதிவாதியின் தகப்பனாரான பொன்னுசாமி என்பவருக்கு சொந்தமானது என்றால் சரியல்ல.

மேல்முறையீடு எண்.07/2015 வழக்கின் தீர்ப்புப்படி கணேசன் மற்றும் அவரது வாரிசுகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் பொன்னுசாமிக்குதான் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு பொன்னுசாமி அவர்களுக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப்பட்டது

என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு பிரதிவாதியின் தகப்பனார் பொன்னுசாமி கணேசன் பண்டிதர் மற்றும் அவர்களுடைய வாரிசுதாரர் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல.

கணேசன் பண்டிதர் அவர்களுக்கு எத்தனை வாரிசு என்றால் சரவணன் மட்டும் தான் எனக்கு தெரியும். 1950 ல் இருந்து பிரதிவாதிகள்தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. கணேசன் பண்டிதர் வாரிசான சரவணன் பெயரிலோ அல்லது ரவி பெயரிலோ பட்டா,சிட்டா, அடங்கல் உள்ளதா என்றால் உள்ளது. அதனை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்தள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ – 3 எந்த வருடத்திற்கான நிலவரி ரசீது என்றால் 2022.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ – 6 எந்த வருடத்திற்கான சிட்டா என்றால் 2022. கணேசன் பண்டிதல் வாரிசான சரவணன் எத்தனை வருடமாக தாவா சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் 20 வருடமாக இருக்கும். 1985 ல் இருந்து 2022 வரை சரவணன் பெயரிலோ அல்லது ரவி பெயரிலோ பட்டா, சிட்டா, அடங்கல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் ரவி பெயரில் உள்ள பட்டா, சிட்டா, அடங்கல் மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன்.

2015 ஆம் ஆண்டு மேல்முறையீடு எண் 7/2015 ன் தீர்ப்பின்படிதாவா சொத்து பொன்னுசாமிக்கு உரிமையானது அதற்கு பின் நான் கிரையம் பெற்றது சட்டவிரோதம் என்றால் மேற்படி வழக்கில் ரவி தரப்பினராக இல்லை. அதனால் மேற்படி தீர்ப்பு என்னை கட்டுப்படுத்தாது. ரவி தாவா சொத்தை எந்த வருடம் கிரையம் பெற்றார் என்றால் 2006. மேற்படி ரவி தாவா சொத்தை ஈஸ்வரி பெயரில் உள்ள பட்டா வைத்துதான் வாங்கினாரா என்றால் எனக்கு தெரியாது.

நான் மற்றும் ரவி மேல்முறையீடு எண் 7/2015 உத்தரவை பின்பற்றாமல் தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் நான் மேற்படி வழக்கின் தரப்பினராக இல்லை மேற்படி உத்தரவு என்னை கட்டுப்படுத்தாது. மேற்படி

உத்தரவு இன்றைய தேதிவரை பொன்னுசாமி மற்றும் அவர் வாரிசுதாரர் தான் தாவா சொத்துக்கு உரிமையானவர் என்றால் சரியல்ல.

மேற்படி தீர்ப்பை கணேசன் வாரிசுதாரர்கள் எதிர்த்து cmp no.18762/2017 in SA.SR NO.55239/2017 காலதாமதம் மனு தாக்கல் செய்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 26.04.2018 நிராகரித்தது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கை எதிர்த்து கணேசன் பண்டிதர் அவர்களின் வாரிசுதாரர் மேல்முறையீடு செய்தாரா என்றால் எனக்கு தெரியாது.

2022 ஆம் ஆண்டு என்னிடம் காட்டப்பட்ட சொத்து ஆவணத்தின் படிதான் நான் தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் அதற்கு முன்பு எந்த ஆவணத்தையும் பார்க்கவில்லை என்றால் 2006 லிருந்து ரவி பெயரில் உள்ள பட்டா, சொத்து ஆவணம் பார்த்தேன். 2006க்கு முன்பான ஆவணத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் பிரிதிவாதிகள் பெயரில் தான் உள்ளது என்றால் சரியில்லை.

2006 லிருந்து 2021 வரை தாவா சொத்திற்கான எந்த ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற பிறகு அனைத்து ஆவணத்தையும் தாக்கல் செய்துள்ளேன். ரவி மற்றும் கணேசன் பண்டிதர் வாரிசுதாரர்கள் தாவா சொத்தை அனுபவித்திருந்தால் நான் ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் திருநின்றவூரில் எத்தனை வருடமாக வசித்து வருகிறேன் என்றால் 7 வருடம். நான் பணிபுரியும் இடத்தில் நிரந்தர பணியாளரா என்றால் சரிதான்.

தாவா சொத்தை யாரு எப்போது பிரச்சனை செய்தார்கள் என்றால் சொத்து வாங்கிய பிறகு 2022 ஆம் ஆண்டு கோபால், பழனி ஒரு பெண் மற்றும் கொள்ளாபுரி என்னுடையது சொத்து என்று பிரச்சினை செய்தார்கள். மாதம் தேதி எனக்கு நினைவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் தான் தாவா சொத்தை அனுபவித்த வருகிறார்கள் என்றாலும் அவர்களை வெளியேற்ற

நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் பிரச்சினை செய்தபோது நான் பிரதிவாதிகள் பெயரில் சொத்து இருக்கிறதா என்பதற்கு அவர்களிடம் ஆவணம் வாங்கி பார்த்தேனா என்றால் நான் கேட்டேன் அவர்கள் மேற்படி பேசிக் கொண்டிருந்ததால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். நான் வழக்கு சொத்தை பார்க்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பிரச்சினை செய்திருந்தால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் கொடுத்தேன். நான் எந்த காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் அரக்கோணம் காவர் நிலையத்தில் 2022 ஆம் ஆண்டில் புகார் அளித்தேன்.

புகார் அளித்தற்கான ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும் மேற்படி சம்பவம் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் நான் சொத்து வாங்கியது தவறு என்றாலும் தாவா சொத்து முழுமையாக பிரதிவாதிக்கு தான் சொந்தம் என்றால் சரியல்ல. எனவே பிரதிவாதிகள் அத்துமீறி தாவா சொத்தில் நுழையக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்தது சரியல்ல.

வழக்கு நிலுவையில் இருக்கும்போது பட்டா தவறுதலாக பெறப்பட்டு நடைபெற்றுள்ள கிரைய ஆவணங்கள் அனைத்தும் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.